# சொல்வயல்

திங்கள் மின்னிதழ்

சொல்வளமே மொழிவளம் நெல்வளமே நாட்டின்வளம்

" சொற்குவை தேரும் பாவலர் மேவத் தொகுப்பீடம்"
(திருவிளையாடற்புராணம்–
தருமிக்குப் பொற்கிழியளித்த படலம்)

ஐ.எஸ்.பி.என் (ISBN): 978-81-958032-0-0

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் வெளியீடு

வயல் : 7 விளைச்சல் : 71 திருவள்ளுவர் ஆண்டு 2057, மீனம் (பங்குனி) – ஏப்பிரல் – 2026




- விளையாட்டுத்துறைக் கலைச்சொற்கள்
- தமிழ்ச் சொற்பிறப்பு அறிவோம் – 'குள்' 'கொள்'
- கால்டுவெல் பகுப்பின் திருந்திய,
  திருந்தாத் திராவிட மொழிகள்
- நாற்றிசைப் பெயராக்கம் நுட்ப விளக்கம்... தொடர்ச்சி
- பண்டமாற்று
- உயிரறிவியலின் முன்னோடி
- எழில்நலம் – கருத்தாய்வு
- இயக்ககச் செயற்பாடுகள்

# விளையாட்டுத் துறைக் கலைச்சொற்கள்

| | | |
|---|---|---|
| Anti–raiders | – | எதிரணியினர் |
| Byes | – | பொய் ஓட்டம்/ஓடா ஓட்டம் |
| Dash | – | விரைவோட்டம் |
| Googly | – | எதிர் சுழற் பந்து |
| Hat trick | – | தொடர் மூவெற்றி |
| Heptathlon | – | ஏழாட்டப் போட்டி |
| Hurdles | – | தடைதாண்டு ஓட்டம் |
| Maiden over | – | ஓட்டம் தராப் பந்துவீச்சு |
| Over the wicket | – | வெற்று எறிவு |
| Overhead kick | – | சுழற்றுதை |
| Pentathlon | – | ஐந்தாட்டப் போட்டி |
| Short run | – | குறையோட்டம் |
| Steeple chase | – | பலதடை ஓட்டம் |
| Virtual sports | – | மெய்நிகர் விளையாட்டுகள் |
| Fencing | – | வாட்சண்டை |
| Goal keeper | – | எய்வரணர் |
| Golf | - | குழிப்பந்தாட்டம் |
| Hockey | – | தொடிக்கோல் |
| Hurdles | – | தடைதாண்டு ஓட்டம் |
| Jersey | – | அணிச்சட்டை |
| Spike shoe | – | ஓட்ட மூடணி |
| Track | – | பந்தயத் தடம் |
| Carrom | – | சுண்டாட்டம் |
| Jogathon | – | மெதுவோட்டப் போட்டி |
| Deaflympics | – | கேளார் விளையாட்டுப் போட்டி |

சொற்குவை (sorkuvai.tn.gov.in ) வலைத்தளத்தில் தமிழுக்கு நிகரான ஆங்கிலச் சொற்களையும், ஆங்கிலத்திற்கு நிகரான தமிழ்ச்சொற்களையும் பார்த்துப் பயன்கொள்ளலாம்.

# சொல்வயல்


செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் வெளியீடு
திருவள்ளுவர் ஆண்டு 2057, மீனம் (பங்குனி) ஏப்பிரல் – 2026

ஆசிரியர் : திருமதி **க. பவானி**
இயக்குநர் (மு.கூ.பொ.)

பொறுப்பாசிரியர் : முனைவர் வே. கார்த்தி

இதழ்க்குழு : திரு. கி. இராமர்
திரு. ஏ. காந்தி
திருமதி. க. கத்தூரி



செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்
முதல் தளம், நகராட்சி நிருவாக அலுவலகக் கட்டடம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை, எம்.ஆர்.சி. நகர்,
சென்னை – 600 028.
மின்னஞ்சல் : solvayal@gmail.com
வலைத்தளம் : www.sorkuvai.tn.gov.in

Directorate of Tamil Etymological Dictionary Project,
First floor, Urban Administrative office Campus,
No : 75 , Santhome high Road,
MRC Nagar, Chennai–28
Mail id : solvayal@gmail.com
Website : www.sorkuvai.tn.gov.in



ஐ.எஸ்.பி.என் (ISBN ): 978-81-958032-0-0

# தமிழ்ச் சொற்பிறப்பு அறிவோம் – 'குள்' 'கொள்'

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர், 'குள்' 'கொள்' ஆகிய சொற்களிலிருந்து பல சொற்கள் கிளைத்து வளர்ந்த முறையினைக் கீழ்க்காணுமாறு விளக்கியுள்ளார்.

## குள்

குள்ளம், குள்ளல், குள்ளை = குறுமை
குஞ்சு, குஞ்சி = பறவைப் பிள்ளை
குச்சு, குச்சி = சிறு கம்பு
குட்டி = சிறியது, பிள்ளை
குருளை = குட்டி
குட்டை, குண்டு = சிறுகுளம்
குழி = சிறு வளை
குட்டை – கட்டை = குறுகியது
குக்கல் = குள்ளநாய்
குன்று = குறை, சிறுமலை,
குன்றி = சிறு முத்து
குன்று + அம் = குன்றம்
குறு – குறள் = குறுமாந்தன், குறு வெண்பா
குறளி = குறும்பேய்
குறுகு = சிறு, குட்டையாகு
குறுக்கு = குறுகிய வழி, ஊடு, நடுமுதுகு
குறை = தன்மை குறைந்தது
குற்றம் = குணக் குறைவு
குற்றி – குச்சி = துரும்பு
குறு + இல் = குற்றில் – குச்சில்
குறும்பு = குறுமலை, குறுமலையரசன், அவன் செய்யும் குறும்பு
குறுமகன் – குறுமான் = சிறுவன்
கூழல் = குறுகியது
கூழி = குறும் ஆ (குறும்பசு)
கூழை = குறுகிய முடி

## கொள்

கொள் = வாங்கு, பெறு, பிடி, மிகுதியாயெடு
கொள்வனை = பெண் கொள்ளல்
கொள்ளை = சூறை, விலை
கொண்டி = கொள்ளை, மாட்டும் கொடுக்கு
கொள்ளி = நெருப்புப் பிடித்த கட்டை, நெருப்பு
கொளு = பொருட் குறிப்பு
கொளுவு = பொருத்து, மாட்டு
கொளுத்து = பற்றவை, பொருத்து, புகட்டு
கொளை = பண்ணமைத்தல்
கொள் – கோள் = கொள்ளுதல், கொல்லுதல், பிடித்தல், பெறுதல், கருத்து, கொள்கை, தீது சொல்லல்
கோளாறு = கொள்ளும் வழி; செப்பம் செய்யும் நிலை, பழுது
கோளி = கொல்லும் பேயுள்ள மரம், கொள்வோன்

இவ்வாறு தமிழ்மொழியின் சொற்பிறப்பு வரலாறு குறித்து மொழிஞாயிறு பாவாணர் எழுதியுள்ள செய்திகளை நாமும் உணர்ந்து வருங்காலத் தலைமுறையினருக்கும் உணர்த்தி அவர்களின் உள்ளங்களில் தாய்மொழிப் பற்றை விதைப்போம்.

# கால்டுவெல் பகுப்பின் திருந்திய, திருந்தாத் திராவிட மொழிகள்

**முனைவர் இரா.கு.ஆல்துரை**
தமிழ்நாட்டரசின் வீரமாமுனிவர் விருதாளர்

## இரு பிரிவு

ஒப்பிலக்கண வல்லுநர் இராபற்று கால்டுவெல் அவர்கள் தம் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் சிறப்பு வாய்ந்த நூலில் தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், துளு, குடகு ஆகிய ஆறு மொழிகளைத் திருந்திய திராவிட மொழிகள் (cultivated languages) என்றும் தொதவம், கோத்தம், கோண்டி(Gondi), கோந்த்து(Khond) அல்லது கூயி, ஒராவன், இராசுமகால் ஆகிய ஆறு மொழிகளைத் திருந்தாத் திராவிட மொழிகள் (uncultivated languages) என்றும் பிரித்து விளக்கி யுள்ளார். இவற்றுள் தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய நான்கு மொழிகள் இலக்கியம் அமைந்த மொழிகள். இம்மொழிகள் தத்தமக்கென்று தனியான எழுத்து முறைகளைக் கொண்டுள்ளன. அவ் வகையில் இவற்றைத் திருந்திய மொழிகள் எனக் கொண்டதைப் பொருத்தம் எனக் கொள்ளலாம். எஞ்சியவை இலக்கியமோ எழுத்ததுமுறையோ கொண்டிராத மொழிகள். என்றாலும் துளு, குடகு ஆகிய இரு மொழிகளை அவர் திருந்திய மொழிகள் எனக் கொண்டுள்ளார்.

தொல் தென்திராவிட மொழியிலிருந்து முதலில் பிரிந்த மொழி துளு (Subrahmanyam 1983:iv). இம் மொழி தனக்கேயுரிய தனிப்பண்பும் நயமும் வாய்ந்தது. தனக்கென்று தனியான எழுத்துமுறை பெறவில்லை என்றாலும், கன்னட எழுத்துமுறை இப்பொழுது இம் மொழியோடு பிரிக்க முடியாதபடி இரண்டறக் கலந்துவிட்டது. இது தன் நலம் குறித்துத் தானே திருந்திச் செந்நிலை பெற்ற மொழி. இம்மொழி ஆழ்ந்து ஆராயவேண்டிய தகுதி வாய்ந்தது (Caldwell 1987:31). திராவிடக் குடும்ப மொழிகளுள் துளு குறிப்பிடத் தகுந்த மொழி. இம்மொழி பேசுவோரிடையே சமயக் கோட்பாட்டுமுறை, கலைமரபுகள், நாடக அமைப்புகள் போன்றவற்றால் தனியான குமுகாயப் பண்பாட்டுக் கூறுகள் காணப்படுகின்றன. இது தென் திராவிட மொழிகள் பேசும் பகுதியில் இருந்தாலும் நடு திராவிடமொழிக் கூறுகள் பலவற்றைக் கொண்டுள்ளது (Upadhyaya 1985:Preface). பார்ப்பனர் வழக்கு, பார்ப்பனர் அல்லாதோர் வழக்கு என்ற மிகுதியான வேறுபாடுகளைக் கொண்ட இரண்டு கிளைவழக்குகளைக் கொண்டுள்ளது (McAlpin 1981:18). துளு தென் திராவிட மொழிகளுள் இலக்கியம் அமைந்த மொழிகளுக்கு அடுத்து அதிகமான மக்கள் பேசும் மொழி.

கால்டுவெல் தம் திராவிட மொழிகள் ஒப்பிலக்கணத்தின் முதற்பதிப்பில் (கி.பி.1856) குடகு மொழியைத் திருந்திய திரவிடமொழியாகக் கொள்ளவில்லை. குடகு மொழியின் அமைப்பையும் வளர்ச்சியையும் நன்கு உணர்ந்த நிலையில் இதனைத் தம் ஒப்பிலக்கணத்தின் இரண்டாம் பதிப்பில் (கி.பி.1875) திருந்திய திராவிடமொழியாகக் கொண்டுள்ளார் (அகத்தியலிங்கம் 1978:75). என்றாலும் குடகுக்கு இத் தகுதி அளிப்பதில் அவருக்குத் தயக்கமே இருந்துள்ளது (Caldwell 1987:32). அண்மைக்காலத்தில் துளு, குடகு ஆகிய இரண்டு மொழிகளிலும் கன்னட எழுத்துமுறையினைக் கொண்டு எழுதி வருகின்றனர். முன்னர் துளுவில் மலையாள எழுத்துமுறையைக் கொண்டும் எழுதியுள்ளனர். எவ்வாறாயினும் இவ் விருமொழிகளிலும் நடந்துள்ள இலக்கியம் அமைக்கும் முயற்சியைக் கருத்திற் கொண்டே கால்டுவெல் இவற்றை இலக்கியம் அமைந்த மொழிகளோடு வைத்துள்ளார். அவ்வகையில் வளர்ச்சியுடன் இருந்ததால் இலக்கியம் அமையாத நிலையில் இருக்கும் இவற்றிற்கு ஒரு தனியிடம் அமைத்துப் பார்ப்பது பொருத்தம். அதனால் ஒட்டு மொத்தமாகத் திருந்திய மொழிகள் எனக் கொள்வதைக் காட்டிலும் அவற்றை இலக்கியம் அமைந்த மொழிகள் (literary languages) (தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு), இலக்கியம் அமைவதற்கு அணியமான நிலையில் இருக்கும் மொழிகள் (pre–literary languages) (துளு, குடகு), என இரண்டாகப் பிரித்து விளக்குகின்றனர். எஞ்சியவை இலக்கியம் அமையாத மொழிகள் (non–literary languages) (Zvelebil 1984:10). கால்டுவெல் திருந்தாத் திராவிட மொழிகளாகக் கருதியவை இன்றைய நிலையில் பழங்குடியினர் மொழிகளாக இருக்கின்றன என்பது கவனிக்கத்தக்கது.

கால்டுவெல் பிராகுயி மொழிபற்றிய குறிப்புகளைத் தம் ஒப்பிலக்கணத்தின் இரண்டாம் பதிப்பின் (கி.பி.1875) பின்னிணைப்பில் இணைத்துள்ளார். அதைச் சேர்த்தால் கால்டுவெல் ஆராய்ந்த திராவிட மொழிகளின் எண்ணிக்கை பதிமூன்றாகும். படகு, இருளா, குறும்பா, குருக்கு முதலியவைப்பற்றியும் கால்டுவெல் குறிப்பிட்டுள்ளார். இலக்கியம் அமையாத மொழிகளின் இன்றியமையாமையைக் குறைத்து மதிப்பிடலாகாது. ஒப்பிலக்கண ஆய்வுக்கு இம்மொழிகளின் விளக்கம் மிகவும் இன்றியமையாதது.

### மொழிப் பண்படுத்தம்

மொழிப் பண்படுத்தம் என்பது மொழியை நேரிதாக்குதல் அல்லது மொழி மேம்பட சிறிய அளவில் மாற்றங்களை மேற்கொண்டு சிறப்பானதாக ஆக்குதல் ஆகும். "பெரும்பாலும் தமக்கென எழுத்துமுறைகளையோ பழைய இலக்கியங்களையோ கொண்டிருக்காத காரணத்தால் சில மொழிகளைத் திருந்தாத மொழிகள் எனக் கொள்ளும் நிலை உண்டாகிறது என்று பலர் நினைக்கின்றனர். மேலும் அம் மொழிகளைப் பேசுவோரின் பழம்பாணி (primitive)த் தன்மையாலும் இவ்வாறு கொள்ளப்படுகிறது என்றும் கருதுகின்றனர். ஆனால் மொழியியல் அடிப்படையில் மொழி அதைப் பேசுவோரின் தேவையை நிறைவேற்றி வருவதனால் எந்த மொழியையும் பழம்பாணி மொழி அல்லது திருந்தாத மொழி என்று கருதுவதற்கு இடம் இல்லை" (Shanmugam 1980: Foreword).

மொழி பேச்சுவழக்கில்தான் வாழ்கிறது. மொழி எழுதும் நிலையை எய்தியது முற்றிலும் நேர்ச்சியானது. இலக்கியமொழி இயல்பான பேச்சுவடிவம் அன்று. எவ்வாறாயினும் செம்மொழி அல்லது இலக்கியமொழி இயல்பல்லாததாக இருந்தாலும் அதனைக் கைவிடுவது அவ்வளவு எளிதன்று. இதுவரை எழுத்துமுறை பெறாத மொழிகளும் எழுத்துமுறை பெறுவதற்கே முயல்கின்றன (MaxMuller 1965:50,51). இலக்கியத்திற்கு மதிப்பு அளிப்பது காலந்தோறும் இருந்து வந்துள்ளது. அதுவும் பழைமை வாய்ந்த செவ்விலக்கியங்கள் பெரும் மதிப்புடன் போற்றப்படு கின்றன. எழுத்து மொழிக்கும் பேச்சுமொழிக்கும் இடையேயான வேறுபாடு எல்லா மொழிகளிலும் காணக்கிடக்கின்றது. தமிழ் போன்ற நீண்ட வரலாறு உடைய மொழிகளில் இவ் வேறுபாடு அதிகமாக இருக்கும். எழுத்துமொழி அல்லது இலக்கியமொழி செம்மையாதல் என்னும் வகையில் பண்படுத்தத்துடன் இருக்கும் என்று கூறலாம்.

### பழங்குடி

தொதவப் பழங்குடி, கோண்டி பழங்குடி என்றாற்போன்று திராவிடப் பழங்குடி மக்களைப்பற்றிக் கால்டுவெல் குறிப்பிட்டுள்ளார். என்றாலும் இப் பழங்குடியினர் பேசும் மொழிகளைப் பழங்குடியினர் மொழி எனத் தனியாகக் கொண்டு தம் ஒப்பிலக்கணத்தில் ஆராயவில்லை. பழங்குடியினர் மொழிகளை அவர் திருந்தாத் திராவிட மொழிகளாகக் கொண்டே விளக்கியுள்ளார். பழங்குடியினர் பேசும் மொழிகள் பழங்குடி மொழிகள். பழங்குடி மொழி என்பதற்கு மொழியியல் நோக்கு வரையறை எதுவும் இல்லை. இந்திய அரசியல் அமைப்புச்சட்டம் 342 இன்படி சில இனக் குழுவினர் பழங்குடியினர் தகுதியைப் பெற்றுள்ளனர். இத்தகுதி குடியரசுத் தலைவர் பாராளுமன்ற ஒப்புதலுடன் அளிப்பதாகும். இந்தியாவில் பழங்குடியினர் என்னும் கருத்துரு சட்டத்துறை, அரசியல்துறை ஆகியவற்றைச் சார்ந்த ஒன்று (ஞானசுந்தரம் 2009:12). பழங்குடி என்னும் சொல்லாட்சியே அவ்வளவு பொருத்தமாக இல்லை என்கின்றனர். மிகப் பழங்காலத்திலிருந்து ஒரே திராவிட இனத்தைச் சேர்ந்த பல்வேறு பிரிவினர் (Caldwell 1987:1) என்று கால்டுவெல்தாமே குறிப்பிட்டுள்ளார். அவ்வகையில் ஓர் இனமக்களில் ஒரு பிரிவினரைப் பழங்குடி என அழைப்பது அங்குள்ள எஞ்சியோரைப் புதுக்குடி என வழங்குவதற்கு இடமளிக்காதா? என்னும் வினாவிற்கு அங்கு இடம் உண்டாகிறது.

திராவிட மொழிகளுள் கதபா, கோண்டி, குவி, இருளா, முடுகா, காடர், காணிக்கர், காட்டு நாயக்கர், கொலாமி, கோயா, கொண்டா, பரோசா, ஊராளி, கொரகா, கோத்தம், தொதவம், யெருக்கலா ஆகிய பதினேழு பழங்குடியினர் பேச்சுகள் இருக்கின்றன. இவற்றுள் கதபா, கோண்டி, குவி, இருளா, கொலாமி, கோத்தம், தொதவம் ஆகிய ஏழு தனியான மொழிகள் (Ramakrishna Reddy 2009:6,7). எஞ்சியவை கிளைமொழிகள். பொதுவாகச் சமதளப்பகுதியில் வாழும் பழங்குடியினர் தங்கள் மொழியினை அல்லது கிளைமொழியினை எளிமையாக இழந்து விடுகின்றனர். இதற்குச் சான்றாகக் கேரளத்தில் மலையாளக் கிளைமொழிகளைப் பேசிவந்த பழங்குடியினர் இப்பொழுது மலையாளத்தை முதல் மொழியாகக் கொண்டிருப்பதைச் சான்றாகக் காட்டுகின்றனர். அதேநேரத்தில் மலைப்பகுதிகளில் வாழும் பழங்குடியினர் தங்கள் மொழியை அவ்வளவு எளிமையாக இழப்பது இல்லை.

ஒரு பழங்குடியினர் ஒன்றுக்கும் மேற்பட்ட பழங்குடியினர் மொழிகளைப் பேசி வருவதும் உண்டு. வடக்கு ஆந்திராவிலும் தெற்கு ஒரிசாவிலும் வாழும் கோந்த்து (Kondh) பழங்குடியினர் கூயி, குவி, பெங்கோ, மண்டா, இண்டி ஆவ் ஆகிய மொழிகளைப் பேசிவருகின்றனர் (Ramakrishna Reddy 2009:10). அண்மைக் காலம் வரை நீலகிரி வாழ் கோத்தர், தொதவர், குறும்பர் போன்றோரிடையே படகுமொழி தொடர்பு மொழியாக இருந்து வந்துள்ளதையும் இதற்குச் சான்றாகக் காட்டலாம். பழங்குடியினர் மொழிகளிலும் கிளைவழக்குகள் உண்டு. படகு மொழியில் ஆறு கிளைமொழி வழக்குகள் இருப்பதாகக் கணக்கிட்டுள்ளனர்.

## வெளித்தாக்கம்

இந்தியத் துணைக்கண்டத்தில் பொதுவான மொழி அமைப்பு பொதுவான பண்பாடு ஆகியவற்றைக் கொண்ட சில தனியான பழங்குடியினர் மொழிக் குழுக்கள் இருக்கின்றன. இவற்றுள் சில கிளைமொழி வழக்கு வேறுபாடுகளுடன் இருக்கின்றன. பழங்குடியினர் இந்திய மக்கள் தொகையில் 8.2 விழுக்காட்டினராக இருக்கின்றனர். இந்தியப் பழங்குடியினர் தங்களுக்கென்று தனியான வழக்காறுகள், மொழிகள் ஆகியவற்றைக் கொண்டுள்ள தொல்குடியினர். பெருமளவில் நேர்மையுடன் கூடிய தனியான வாழ்க்கை முறையைக் கொண்டுள்ள பழங்குடியினர் ஏறக்குறைய முழுமையாக வளர்ந்த பிற குமுகாயங்களுடன் தொடர்பு இல்லாத நிலையில் நீண்ட காலமாக வாழ்ந்து வருகின்றனர். "திருந்தாத் திராவிட மொழிகளைப் பேசுவோரெல்லாம் மலைப் பகுதியிலேயே வாழ்வது நமக்கு வியப்பினை அளிக்கிறது" (மீனாட்சி சுந்தரம் 1982:23).

உண்மையில் திருந்தாத் திராவிட மொழிகள் பேசுவோர் மலைப்பகுதியில் இருந்ததனாலேயே வெளித்தாக்கம் இல்லாமல் அல்லது குறைவான வெளித்தாக் கத்துடன் நீண்ட காலம் இருக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது. இதனால் அம்மொழி களுக்கு வெளித் தாக்கத்தால் ஏற்படும் மாற்றம் இல்லாமல் இருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் தங்கள் மூலமொழிகளுடன் தொடர் பில்லாமல் இருந்ததனால் அவற்றினின்று வேறுபட்டுத் தனி மொழிகளாக உருப்பெறுவதற்கும் இடம் அளித்துள்ளது. இவ்வாறான மொழியியல் சூழல்களை யெல்லாம் அறிந்தவராகவே கால்டுவெல் இருந்துள்ளார். இதனை நீலகிரி மலைவாழ் மக்களின் மொழியைப் போலவே குடகுமொழியும் பிறமொழி யாளர்களால் எளிதில் புக இயலாத ஒதுக்கிடமான மலை முகடுகளில் இருப்பதனால் அது தன் சொல்லுருவங்களை உருவிழந்து போகாதவாறு காத்து நிற்கிறது என்பதில் சிறிதும் ஐயம் இல்லை என்று பேராசிரியர் பர்னல் குறிப்பிட்டதைத் தம் ஒப்பிலக்கணத்தில் பதிவு செய்துள்ளது (Caldwell 1987:33) போன்றவற்றைக் கொண்டு அறியலாம்.

இந்தியப் பழங்குடியினர் மொழியை நாட்டுப்புற மொழி என்று குறிப்பிடலாம். எழுத்து முறையோ இலக்கியமோ உருவாகாத நிலையில் அவை பேச்சு மொழியாகவே வழக்கில் இருக்கின்றன. பழங்குடியினர் மொழிகள் சிக்கலான அமைப்பைக் கொண்டன. இருந்தாலும் இவை பழங்காலத்து வளர்ச்சியைப் பெருமளவில் அடையாளப் படுத்துவனவாக இருகின்றன. வெளித்தாக்கம் இல்லாத நிலையில் இவை தம்மளவில் இயல்பான புத்தாக்கங்களைக் கொண்டுள்ளன. அதே நேரத்தில் பழையனவற்றைத் தக்கவைக்கும் இயல்பும் பழங்குடியினர் மொழியில் கூடுதலாகக் காணப்படுகின்றது.

"தெற்காசிய வழக்காற்றில் பழங்குடி (tribal) என்னும் சொல்லின் பயன்பாடு ஒரு வகையான குமுகாய அமைப்பைக் குறிப்பிடுகிறது அல்லாமல் அது வளராத நிலையையோ பொருளாதார முன்னேற்றம் இல்லாததையோ குறிப்பிடு வதில்லை. அது பொதுவாக, இப்பொழுது இல்லை என்றாலும் கடந்த காலத்தில் ஒரு வகையில் தனிமைப் பட்டிருந்ததைக் குறிப்பிடுகிறது. இச் சூழலில், தெற்காசிய குமுகாயத்தில் பரந்த நிலையில் இருக்கும் அமைப்புமுறைக் கோட்பாட்டில் சாதி (caste) என்பதற்கு மாற்றாகப் பழங்குடி விளங்குகிறது" (McAlpin 1981:19).

## எழுத்தமையாத மொழிகள்

திராவிடமொழிகளுள் இலக்கியம் பெறாத மொழிகள் எதுவும் கல்வியில் பயிற்று மொழியாக இல்லை. அரசியல், ஆட்சி அல்லது தேசிய அளவில் வேறு ஆட்சிப்பரப்பு எதிலும் அதிகாரம் பெற்றதாக இல்லை. இவற்றிற்குத் தனியான எழுத்துமுறைகள் எதுவும் உருவாகவில்லை. இவை வட்டார மொழிகளின் ஆதிக்கத்திற்கு உட்பட்டு இருக்கின்றன. இவை மதிப்புக் குறைவான மொழிகளாகக் கருதப்படுகின்றன. இவை எழுத்தறிவு பெறாத இருமொழி யாளர்கள் அல்லது மும்மொழியாளர்கள் மொழிகளாக இருக்கின்றன. வாய்மொழி இலக்கியங்களை மட்டும் கொண்டனவாக இருக்கின்றன. இவை இக்கால மின்னணு ஊடகங்களில் இடம்பெறாத மொழிகள்.

இப்படிப் பட்ட எதிரான நிலை இருந்த போதிலும் இம் மொழிகள் இதுவரை அழியாமல் வழக்கில் இருக்கின்றன. இம் மொழிகள் இவற்றைப் பேசுவோர்களை அடையாளம் படுத்தும் குறியீடுகளாக விளங்கி வருகின்றன. பெரும்பாலும் இம் மொழிகளின் பெயர்களை வைத்தே இம்மொழிகளைப் பேசுவோரின் இனப்பெயர்கள் அமைந்துள்ளன. இம்மொழிகள் மரபுரிமை, மண்ணுக்குரிய அறிவு, பண்பாட்டுக் கூறுகள், சடங்குமுறைகள் போன்றவற்றைக் கொண்டு செல்லும் கருவிகளாக விளங்குகின்றன. வட்டாரமொழித் தொலைக்காட்சி, திரைப்படம், தொலைத்தொடர்பு அமைப்பு போன்றவற்றால் இம் மொழிகளைப் பேசுவோர் குறிப்பாக இளைய தலைமுறையினர் ஈர்க்கப்படுவதற்கு வாய்ப்புகள் மிகுதி. இதனால் தங்கள் தாய்மொழி இழப்புக்கு வாய்ப்பு உண்டு. அதிலும் மிகக் குறைந்த எண்ணிக்கையினரால் பேசப்படும் மொழிகள் வழக்கிழப்பதற்கு வாய்ப்புகள் மிகவும் அதிகம்.

## திராவிடம்

தென் இந்தியாவில் கி.பி.7 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சமற்கிருத இலக்கண ஆசிரியரும் மெய்யியலாளருமான குமாரில பட்டர் தம் தந்ரவார்த்திக என்னும் நூலில் "தத்யதா த்ராவிடாதி பாஷாயாம் ஏவ" [அப்படி திராவிடம் முதலான (தொடர்புடைய பிற) மொழிகள்] என்று குறிப்பிட்டுள்ளார்.. சமற்கிருதச் சொல் த்ராவிட என்பதும் தமிழ் என்ற சொல்லும் வேரளவில் தொடர்புடையன (Zvelebil 1984:10). அவ்வாறெனில் த்ராவிடாதி பாஷாயாம் என்னும் தொடருக்குத் தமிழ் முதலான மொழிகள் என்று பொருள் கொள்ள வேண்டும். ஆனால் இத்தொடரை "ஆந்த்ர த்ராவிட பாஷாயாம் ஏவ" என ஏ.சி.பர்னல் (கி.பி.1872) பிழையாகக் கொண்டதைக் கால்டுவெல்லும் பின்பற்றியதனால் கன்னடம் தெலுங்கிலும் மலையாளம் தமிழிலும் சேர்த்துப் பார்க்கத்தக்கன வென்றும் தமிழ், தெலுங்கு ஆகிய இரண்டு மொழிகளையே தென்னாட்டு மக்களில் பெரும்பாலோரால் வழங்கப்பெற்ற மொழிகள் என்றும் குறிப்பிட நேர்ந்தது (Caldwell 1987:4). தமிழையும் தெலுங்கையும் ஒருசேரக் குமரிலபட்டர் குறித்தார் என்று தவறாகக் கொள்ள நேர்ந்தது. கால்டுவெல்லைப் போலவே இசுடென் கோனோ (கி.பி.1906) போன்ற பலரும் தவறாகப் பொருள் கொண்டு வந்துள்ளனர். என்றாலும் திராவிடம் என்னும் சொல் தென் இந்திய மொழிகளைக் குறிக்கப் பயன்படுத்தி வந்துள்ளதையும் கால்டுவெல் சான்றுகளுடன் குறிப்பிட்டுள்ளார்.

## நோக்கம்

1.) பல்வேறு திராவிட மொழிகளின் இலக்கண நெறிகள், சொல் வடிவங்கள் ஆகியவற்றை ஒன்றோடொன்றுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதன் வழி திராவிட மொழிகளின் மிகப்பழைய அமைப்பு முறை, அவற்றின் தனிச்சிறப்பு ஆகியவற்றைப் பற்றிய முழு விளக்கங்களைக் காட்டுவதே இந் நூலின் நோக்கம் (Caldwell 1987:1). திராவிட மொழிக் குடும்பத்தைப் பற்றி விளக்கும் வகையில் அதுவரை நிலவிவந்த திராவிடமொழிகள் சமற்கிருதத்திலிருந்து பிறந்தன என்னும் கருத்தை ஆணித்தரமாக மறுக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதற்குரிய விளக்கங்களை அளிக்கும் வகையில் மொழிக் குடும்பத்தின் இயல்பு, சமற்கிருதம் சார்ந்த இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பம், இக் குடும்பம் திராவிடக் குடும்பத்திலிருந்து வேறுபட்டுச் செயல்படும் இலக்கணமுறை, சொற்கள் அமைப்பு, வேர்ச் சொற்கள் என்பனபோன்று பல்வேறு வகைகளில் தெளிவுபட உரிய சான்றுகளுடன் விளக்கமாக ஆராய வேண்டிய நிலை உருவாகியது.

திருந்தாத் திராவிடமொழிகளில் சமற்கிருதற் சொற்கள் அரிதாகவே இடம்பெற்றுள்ளன. ஏறக்குறைய முழுமையாகச் சமற்கிருதச் சொற்கள் இல்லாமலிருக்கும் திருந்தாத திராவிட மொழிகளின் நிலை திராவிடமொழிகள் சமற்கிருதத்திலிருந்து பிறந்தவை அல்ல என்பதைக் காட்ட ஒரு வலுவான சான்றாகத் திகழ்கிறது. சில திராவிடமொழிகளால் தம்மிடமுள்ள சமற்கிருத சொற்களை முழுமையாக நீக்கி வழங்க இயலும். சமற்கிருதச் சொற்கள் திராவிடமொழிகளில் பெரும்பாலும் தேவை அடிப்படையில் இல்லாமல் அழகுப் பொருள்களாகவும் பகட்டொப்பனைப் பொருள்களாகவும் இருக்கின்றன (Caldwell 1987:45) என்பன போன்று அவர் குறித்துள்ளது எல்லாம் திராவிடமொழிகள் சமற்கிருதத்திலிருந்து வேறானவை எனக் காட்டுவதற்கே ஆகும்.

"கால்டுவெல்லின் ஒப்பிலக்கண ஆராய்ச்சி, அக்காலத்தில் அறியப்பட்ட எல்லாத் திராவிட மொழிகளையும் கருத்திற் கொண்டதெனினும், அடிப்படையில் அது தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய நான்கு திருந்திய திராவிடமொழிகளை அடிப்படையாகக் கொண்டதே ஆகும். அக்காலத்தில் ஏனைய மொழிகளைப் பற்றிய ஆய்வுக்குரிய செய்திகள் குறைவே. ஆகையால் கால்டுவெல்லின் நூலைத் தெலுங்கினை உள்ளடக்கிய நான்கு தென் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்றே கூறலாம்"(மீனாட்சி சுந்தரம் 1982 :18).

2.) திராவிட மொழிகளுக்குள் மிகப்பழங்காலத்தில் திருந்திய நிலைபெற்றதும், நனிநாகரிகமாக ஆக்கப் பெற்றதும் பலவகையில் திராவிட இனத்திற்குப் படிநிகராளியாக விளங்குவதுமான தமிழ் மொழியின் அமைப்பு முறைப் பற்றிய விளக்கங்களைப் பெருமளவில் தருவதே இந்நூலாசிரியரின் இடைவிடாச் சிறப்பு நோக்கமாகும் (Caldwell 1987:1) என்று அவரே குறிப்பிட்டி ருப்பதால் அவர் தமிழல்லாத பிற திராவிட மொழிகளுக்குத் தமிழை நோக்க குறைந்த அளவே இடம் தந்துள்ளார் என்பதைப் புரிந்துகொள்ளலாம். அதிலும் அவர் காலத்தில் ஆராயப் பெறாத திருந்தாத் திராவிடமொழிகளைப் பற்றிச் சுருக்கமாகவே குறிப்பிட்டுள்ளார். அவ்வகையில் தமிழால் கடனாகக் கொண்டிருக்கும் சமற்கிருதச் சொற்களை அறவே கைவிட்டு இயங்க இயலும் என்றும் அவ்வாறு அக்கடன் சொற்களை நீக்குவதனால் தமிழ் உயர்தனிச் செம்மொழியாம் பெருநிலை பெறும் என்றும் குறிபிட்டுள்ளார் (Caldwell 1987:46,47). கால்டுவெல்லின் தமிழ் அறிவு ஆழங்கால் பட்டது. இவரிடம் தமிழ் அல்லாத பிற திராவிட மொழிகளில் நேரடியான புரிதல் தமிழை நோக்கக் குறைந்த அளவே இருந்துள்ளது.

## மூலமொழி

திராவிடமொழிகள் எல்லாம் பொதுவான இலக்கணப் பண்புகளைக் கொண்டுள்ளன. இவை தேவையான தனித்த இயல்புள்ளனவாக இருக்கின்றன. இம்மொழிகள் மிகப் பெருமளவிலான அடிப்படை வேர்ச்சொற்களைப் பொதுவாகக் கொண்டுள்ளன. இவற்றால் இவை அனைத்தும் ஒரே மூலத்திலிருந்து பிறந்தவை என்றும் ஒரே இனத்தைச் சேர்ந்தவை என்றும் மதிக்கும் உரிமையுடைய வாகின்றன (Caldwell 1987:3).

இலக்கண அமைப்பில் காணும் ஒற்றுமை, ஒத்தவடிவுடைய சொற்கள் ஆகிய இரண்டும் மொழியினத்தைக் காட்டும் தன்மைகள். இவற்றுள் முதலாவது அடிப்படையானது. கடன் அடிப்படையில் சில சொற்கள் ஒத்த வடிவுடையனவாக இருக்கக் கூடும். அவ்வகையில் அது மொழியினத்தைக் காட்டும் அடையாளமாகா (Caldwell 1987:38). பெரும் பகுதிச் சொற்களில் ஒத்த வடிவம் காணும் போது அது இலக்கண அமைப்பைப் போன்று அடிப்படையானதாகக் கொள்ளும் தன்மை பெறும். கால்டுவெல் இலக்கண விளக்கத்திற்கு விரிவாக இடம் அளித்துள்ளார். இதனை ஒப்புநோக்கும்போது ஒத்தவடிவுடைச் சொற்கள் (இனச்சொல்) தொகுப்பிற்கு அவ்வளவு இடம் அளிக்கவில்லை என்றுதான் குறிப்பிட வேண்டும். என்றாலும் இவர் திராவிடச் சொற்பிறப்பியல் அகரமுதலியின் தேவையைக் குறித்துள்ளார். ஒலியனியல், உருபனியல் ஆகியவற்றைப் பற்றிய விரிவான விளக்கம் கொடுத்துள்ளார். என்றாலும் தொன்மொழியை மீட்டுருவாக்கம் செய்யும் வகையைக் காட்டவில்லை என்கின்றனர் (Gopinathan Nair 2004:2).

"குடும்ப மொழிகள் பெரும்பாலானவற்றில் காணப்படுதல் என்ற அடிப்படையில் மூலத் திராவிட வடிவங்கள் தீர்மானிக்கப்படுகின்றன. அருகி வழங்கும் வடிவங்கள் சில சமயங்களில் மூலத் திராவிட மொழி வடிவங்களாக இருத்தலும் உண்டு" (மீனாட்சி சுந்தரம் 1982 :24). "செந்தமிழ் என்றழைக்கப்படும் இலக்கியத்தமிழ் திராவிடத் தொன்மொழியின் நிலையினைத் தெளிவாகக் காட்ட வல்லது என்று சிலர் கருதுகின்றனர். செந்தமிழின் பெருமையைக் குறைத்துக் கூற வேண்டியது இல்லை. என்றாலும் திராவிடத் தொன்மொழியைக் காட்டும் தனித்தகுதி எம் மொழிக்கும் இல்லை என்று நான் கருதுகிறேன். வழக்கிலிருக்கும் திருந்தாத் திராவிட மொழிகள் உட்பட அனைத்து மொழிகளின் ஒப்பீட்டு ஆராய்ச்சியே திராவிடத் தொன்மொழியைக் காட்டவல்லது என்று நான் கருதுகிறேன்" (Caldwell 1987:77) என்று குறிப்பிடுவதிலிருந்து அவர் தொன்மொழியைக் காண்பதற்கு ஒப்பிலக்கண ஆராய்ச்சியை முழுமையாகச் செயல்படுத்த முயன்றுள்ளதை அறியலாம்.

ஒப்பிலக்கணத்தின் பணி இனத் தொடர்புடைய மொழிகள், கிளைமொழிகள் ஆகியவற்றின் இலக்கண அமைப்புகளைப் பகுத்தாய்வதும் ஒப்பிடுவதும் ஆகும். ஒப்பிடுவதன் மூலம் பழங்காலத்துச் சொல் வடிவங்களையும் அவற்றின் பொருள்களையும் கண்டறிவது இதன் நோக்கம் ஆகும் (Encyclopeadia Brittanica 1911: Grammar). 19ஆம் நூற்றாண்டில் நடந்த ஒப்பிலக்கண ஆராய்ச்சிகளெல்லாம் அடிப்படை விளக்கங்களுடன் பொது மூலத்திலிருந்து உருவான மொழிகளுக் கிடையே நிலவும் இனத் தொடர்புகளை நிலை நாட்ட முயன்றுள்ளன. மொழியில் காலந்தோறும் மாற்றங்கள் நிகழ்கின்றன. பெரும்பாலும் இம் மாற்றங்கள் முறையாகவும் ஒழுங்குக்கு உட்பட்டும் நிகழ்கின்றன. இக்கருத்தின் அடிப்படையில் இனமொழிகளுக்கிடையே நிலவும் உறவினை விளக்குவதன்வழி அவை கிளைத்து வந்துள்ள பழங்காலத்துப் பொது மொழியை விளக்க ஒப்பிலக்கணம் முயல்கிறது. பழங்காலத்துப் பொதுமொழியைப் பதிவுகளுடன் காட்டவேண்டும் அல்லது அது வழக்கத்தில் இருந்திருக்க வேண்டும்

என்னும் கட்டாயத்தை ஒப்பிலக்கண ஆய்வு கொள்வது இல்லை. பழங்காலத்துப் பொதுமொழியைக் கருதுகோளாகவே கொண்டு ஒப்பிலக்கணம் ஆராய்கிறது.

## திராவிடமொழிகள்

1.) தமிழ், 2.) மலையாளம், 3.) கன்னடம், 4.) தெலுங்கு, 5.) கோண்டி (Gondi), 6.) குருக் அல்லது ஒரான், 7.) துளு, 8.) குவி, 9.) கூயி அல்லது கோந்த்து (Khond ), 10.) கோயா, 11.) பிராகூய், 12.) மால்டோ (இராசுமகால் அல்லது மாலர்), 13.) குடகு, 14.) படகு, 15.) கொலாமி, 16.) இருளா, 17.) குறவா, 18.) பர்சி, 19.) கொண்டா அல்லது கூபி, 20.) கதபா, 21.) நாய்க்கி, 22.) பெங்கோ, 23.) கோத்தம், 24.) ஒல்லாரி, 25.) தொதவம் (மீனாட்சி சுந்தரம் 1982 :21,22), 26.) இண்டி அவெ (Indi-Awe) (Nagamma Reddy 2004:1) ஆகியவை இப்பொழுது திராவிடமொழிகளாகக் கண்டறியப்பட்டுள்ளன. மேலும் சில மொழிகளை அடையாளப்படுத்தி வருகின்றனர்.

கால்டுவெல் தாம் குறிப்பிட்ட 12 திராவிடமொழிகளுள் தமிழும் மலையாளமும் நெருங்கிய உறவுடைய மொழிகள். என்றாலும் அவற்றிற் கிடையேயும் புரிந்துகொள் தன்மை மிகக்குறைவு எனக் குறிப்பிடுகிறார். தாம் குறிப்பிட்ட பன்னிரண்டு மொழிகளுக்கிடையே புரிந்து கொள்ளும் தன்மை கொண்ட உறவுடைய இருமொழிகள் எவையும் இல்லை (Caldwell 1987:40). ஆகையால் திராவிட இன மொழிகள் பலவும் பொதுவான ஒரே மூலத்தினின்று தோன்றியனவே ஆயினும் அவற்றை ஒரு மொழியின் கிளைமொழிகளாகக் கருதாமல் இனத்தொடர் புடைய தனி மொழிகளாகவே கருதவேண்டும் (Caldwell 1987:73) என அவர் குறிப்பிட் டுள்ளார். திராவிடத் தொன் மொழியின் பழைமை, இம்மொழி பேசியவர்களுள் வெவ்வேறு பிரிவினர் வெவ்வேறு காலக்கட்டங்களில் வெவ்வேறு தொடர்பு இல்லாத இடங்களில் வாழ்ந்து வந்தமை, திராவிடத் தொன்மொழி வழக்கிலிருந்த பெரிய நிலப்பரப்பு போன்றன இன்றைய திராவிடமொழிகள் உருப்பெறக் காரணங்களாகும்.

"துளு, குடகு, தொதவம், கோத்தம் ஆகிய தென் இந்திய சிறுமொழிகள் தமிழ், கன்னடம் ஆகிய இரு மொழிகளுக்கு இடைப்பட்ட நிலையில் இருக்கின்றன. அதுவும் மிகுதியான கன்னடச்சார்புடன் இருக்கின்றன" (Grierson 1906:iv 284). தமிழும் மலையாளமும் நெருங்கிய உறவுடைய மொழிகள். கன்னடமொழி தமிழிலிருந்து வேறுபடுவதைக் காட்டிலும் மிக அதிகமாகத் தெலுங்கிலிருந்து வேறுபடுகிறது (Caldwell 1987:40) என்பன போன்று மொழிகளுக்கிடையே காணும் உறவுகளைக் குறிப்பிட்டிருந்தாலும் அவர் மொழிகளை உட்குழு (subgroup) படுத்த முயலவில்லை (Gopinathan Nair 2004:2).

திராவிடவியல் களப்பணியில் இதுவரை அடையாளம் காணப்படாத மொழிகளைக் கண்டறிவது முதன்மையான பணியாகும். வயநாடு, நடுவண் இந்தியா போன்ற பகுதிகளில் இதுவரை கண்டறியப் படாத மொழிகள் இருப்பது வியப்பளிக்கிறது. அதேபோல் கடந்த சில ஆண்டுகளில் கண்டறியப் பட்ட மொழிகள் இன்னும் விளக்கப்படாமல் இருக்கின்றன. குருக்கு மொழியுடன் உறவு உள்ளதாகக் காணப்படுவதும் நேபாளத்தில் ஏறக்குறைய பத்தாயிரம் பேரால் பேசப்படுவதுமான தங்கார் (Dhangar) மொழி கிளைமொழியா தனிமொழியா என்று இதுவரை விளக்கப்படவில்லை. நீலகிரியில் உள்ள மொழிகளுள் தொதவம், கோத்தம், படகு போன்ற ஒரு சில மொழிகளே இதுவரை விளக்கப் பெற்றுள்ளன. அங்கு, இன்றைய அளவில் 16 முதல் 18 வரையான பழங்குடியினர் மொழிகள் உள்ளன. இருளா மொழியில் மேலெநாடு இருளா, வேட்டைக்காடு இருளா, கசபா, ஊராளி என்னும் நான்கு கிளைமொழிகள் உள்ளன. குறும்பா மொழியில் ஆலு குறும்பா, பாலு குறும்பா, பெட்ட குறும்பா, தேனு குறும்பா, முள்ளு குறும்பா, முடுகா என்னும் ஆறுமொழிகள் இருக்கின்றன (Zvelebil 1984:5). இன்னும் கண்டறியப்பட வேண்டிய திராவிடமொழிகள் இருக்கின்றன; அடையாளம் கண்டுள்ள திராவிடமொழிகள் சில விளக்கப் படாமல் இருக்கின்றன. ஒப்பிலக்கணத்தில் சேர்க்க வேண்டிய சில செய்திகளாவது இம் மொழிகளில் இருக்கும் என்று நம்பலாம். அவ் வகையில் இவற்றை யெல்லாம் உள்ளடக்கி ஆராயப்பெறும் திராவிடமொழி ஒப்பிலக்கணமே முழுமையானது என்று குறிப்பிடலாம்.

## கிளைமொழி

இலக்கியத் தமிழ் பேச்சுத்தமிழ் என்றோ பழந்தமிழ் புதுத்தமிழ் என்றோ செந்தமிழ் கொடுந்தமிழ் என்றோ பெயரிடப்பெற்று ஏறக்குறைய வேற்றுமொழிகளோ என மதிக்கத்தக்க வகையில் மாறுபடும் இருவகை மொழிநடைகளைத் தமிழ் கொண்டுள்ளது (Caldwell 1987:6) என்று குறிப்பிடுவதிலிருந்து அவர் இலக்கியக் கிளைமொழி, பேச்சுக் கிளைமொழி ஆகியவற்றைப் பற்றித் தெளிவாகவே அறிந்துள்ளார் என்பதை உணரலாம். இதைப் போலவே மலையாளம்,

கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளிலும் எழுத்துக் கிளைமொழி, பேச்சுக் கிளைமொழி இருப்பதைச் சுட்டியுள்ளார். இவற்றால் கிளைமொழிபற்றிய தெளிவான கருத்தைக் கொண்டிருந்தார் என்பதை அறியலாம். மேலும் புரிந்துகொள் தன்மையை வைத்தே மொழி, கிளைமொழி ஆகியவற்றின் நிலையை உறுதிப்படுத்த வேண்டும் என்பதையும் அறிந்துள்ளார்.

குடகுமொழியைக் கன்னடத்துக் கிளைமொழி என்று தம் ஒப்பிலக்கணத்தின் முதல் பதிப்பில் (கி.பி.1856) கால்டுவெல் கருதி இருந்தார். ஆனால் இரண்டாம் பதிப்பில் அதனைத் தனியான மொழி என்று குறிப்பிட்டுள்ளார். கால்டுவெல் படகு மொழியைக் கன்னடத்துக் கிளைமொழி அதுவும் பழங் கன்னடக் கிளைமொழி என்று குறிப்பிட்டுள்ளார் (Caldwell 1987:30). ஆனால் இப்பொழுது மொழியியல் அறிஞர்கள் இம்மொழியைத் தனியான மொழி என்று குறிப்பிட்டுள்ளனர்.

தமிழ் நாடு கேரளம் ஆகிய மாநிலங்களில் இருக்கும் கசபா, காடர், ஊராளி, குறும்பா, முடுகா போன்றவை தனியான மொழிகளா இல்லை கிளைமொழிகளா என்று இன்னும் ஆய்வு முடிவுகள் வெளிவரவில்லை (Nagamma Reddy 2004:1).

### தெற்காசிய மொழிக்குடும்பம்

கால்டுவெல் தம் ஒப்பிலக்கண நூலுக்குத் திராவிடம் அல்லது தென் இந்திய மொழிகள் குடும்பம் என்று பெயரிட்டுள்ளார். ஆனால் பாகித்தானம், நேப்பாளம், இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளில் திராவிடமொழிகள் இருக்கின்றன. ஆகையால் இக் குடும்ப மொழிகளைத் தெற்காசிய மொழிகள் குடும்பம் என அழைப்பதே பொருத்தம் (Nagamma Reddy 2004:1). மற்ற இடங்களைப் போலில்லாமல் ஏறக்குறைய தென் இந்தியா முழுவதும் திராவிட மொழிகள் பேசுவோர் இருப்பதைக் கருத்திற் கொண்டு கால்டுவெல் அவ்வாறு பெயரிட்டுள்ளார் போலும். திராவிடம், தமிழ் ஆகிய சொற்கள் வேரளவில் தொடர்புடையன. தமிழும் இக் குடும்பத்தில் ஓர் உறுப்பாக இருப்பதால் இக் குடும்பத்திற்குத் திராவிடம் என்னும் பெயர் அவ்வளவு பொருத்தமாக இல்லை என்று கருதியதனாலேயே தென் இந்திய மொழிகள் குடும்பம் என்ற இன்னொரு பெயரையும் அவர் கொடுத்துள்ளார் எனலாம். எவ்வாறோ இப் பெயர் வேரூன்றவில்லை. திராவிடம் என்னும் பெயரே உலக முழுவதும் பரவியுள்ளது. இன்றைய நிலையில் இச் சொல் பொதுநிலையில் தன் பொருளை இழந்து ஓர் அடையாளக் குறியீடு என்னும் அளவில் பயன்பாட்டில் உள்ளது.

இன்றைய நிலையில் மொழியியலாளர்கள் திராவிடமொழிகளைத் தென் திராவிடம், நடுத் திராவிடம், வடதிராவிடம் என வகைப்படுத்தி விளக்குகின்றனர். தென் திராவிடம் (தமிழ், மலையாளம், குடகு, கோத்தம், தொதவம், கன்னடம், துளு), நடுத் திராவிடம் (தெலுங்கு, கோண்டி, கொண்டா, பெங்கோ, மண்டா, கூயி, குவி, கொலாமி, நாய்க்கி சந்தா, பர்சி, கதபா), வடதிராவிடம் (குருக்கு, மால்தோ, பிராகுயி) என்னும் உட்பகுப்பில் நடுத் திராவிடத்தில் அதிகப்படியான மொழிகள் இருக்கின்றன. ஆகையால் நடுத் திராவிடம் மற்றவற்றைக் காட்டிலும் காலத்தால் முன்னதாக மூலமொழியிலிருந்து பிரிந்திருக்க வேண்டும் எனக் கருதுகின்றனர் (Subrahmanyam 1983:iv,v).

### முன்னோடி

"ஓரினமொழிகளாகக் காணப்படும் மொழிகள் அனைத்தும் ஒரு காலத்தில் ஒரே மொழியாக, அதாவது தொன்மொழியாக இருந்தது என்றும், பின்னர் பல்வேறு கிளைமொழிகளாகப் பிரிந்தன என்றும், அதன் கிளைமொழிகளே சில பல காரணங்களால் பிரிந்து காலத்தாலும் இடத்தாலும் மாறுபாடு பெற்றுத் தனித்தனி மொழிகளாகப் பிரிந்து நின்றன என்றும் கருதுவர்.. .மூலமொழியைத் தொன்மொழி என்றும், பிரிவுபட்ட மொழிகளை இனமொழிகள் என்றும் மொழியியல் அறிஞர்கள் கருதுவர்… ..இனமொழிகள் அனைத்திலிருந்தும் குறிப்பாக அவற்றிடையே காணப்படும் பண்புகளிலிருந்து மூலமொழி அல்லது தொன்மொழிக் கூறுகளைக் கண்டுபிடிப்பதே ஒப்பிலக்கண ஆராய்ச்சியின் நோக்கம்" (அகத்தியலிங்கம் 1978:63,64). இவ் வொப்பிலக்கண அடிப்படைக் கருத்துகளைத் திராவிடமொழிகளுக்கு முழுவதுமாகப் பொருத்தி ஆராய்ந்துள்ள தன்மையையே திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம் தெளிவாகக் காட்டி நிற்கிறது.

திராவிடக் குடும்ப மொழிகளுக்கு ஒப்பிலக்கணம் வரைந்த முதல் அறிஞர் கால்டுவெல். ஒரே குடும்ப மொழிகளை ஒப்பிட்டு ஆராய்தல்

என்னும் அடிப்படையிலான ஆராய்ச்சி 19ஆம் நூற்றாண்டுக்கு முன் திராவிடக் குடும்பத்து மொழிகளுக்கு மேற்கொள்ளப்படவில்லை. கால்டுவெல் தம் ஒப்பிலக்கண ஆராய்ச்சியை மேற்கொண்ட காலத்தில் மொழியியல் துறையின் வளர்ச்சி மிக மிகக் குறைவாகவே இருந்தது. அக்காலத்தில் இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைப் பற்றிய ஒப்பிலக்கண ஆய்வும் வளர்ச்சி பெறாத நிலையில் இருந்தது என்பது குறிப்பிடத் தக்கது. இச் சூழல் பின்னணியில் பார்த்தால் கால்டுவெல்லின் ஒப்பிலக்கணத்தின் சிறப்பினையும் இன்றியமையாமையையும் தெளிவாக உணர்ந்து கொள்ளலாம்.

திராவிட மொழியியலுக்கு வித்திட்டவர் கால்டுவெல். இவருக்கு முன் இக் குடும்பம் தனியானது என தெளிவற்ற நிலையில் அறியப்பட்டிருந்தாலும் அதைத் தெளிவுடையதாக்கி முழுமையாக வளர்த்தெடுத்த பெருமை இவரையே சாரும். இம் மொழிக் குடும்பத்திற்குத் தனியான ஒரு பெயர் (திராவிடம் அல்லது தென் இந்திய மொழிக் குடும்பம்) அமைய காரணமாக இருந்தவரும் இவரே. இக்குடும்ப மொழிகளைத் திருந்திய, திருந்தா மொழிகள் எனப் பகுத்து, இப்பொருண்மைபற்றி நல்ல தெளிவினை ஏற்பத்தியுள்ளதைக் காணலாம்.

## குறிப்புதவி நூல்கள்


1.அகத்தியலிங்கம்,ச.,1978 உலமொழிகள் ஐந்தாம் பகுதி திராவிட மொழிகள், அனைத்திந்திய மொழியியற் கழகம், அண்ணாமலை நகர்

2.ஞானசுந்தரம்,வ.,2009, இந்தியச் சூழலில் மொழி இழப்பு: ஒரு சமுதாய மொழியியல் பார்வை, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை

3.மீனாட்சிசுந்தரன்,தெ.பொ.,1982, தமிழ்மொழி வரலாறு (தமிழாக்கம் ச.செயப்பிரகாசம்), சர்வோதய இலக்கியப் பண்ணை , மதுரை

4.Caldwell,Robert, 1987, A Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages, AES, New Delhi (first published 1913)

5.Encyclopaedia Britannica, 1978, University of Chicago, USA

6.Gopinathan Nair,2004, A Dravidian Etymological Dictionary and its impact on Comparative Dravidian Studies, 32nd All India Conference of Dravidian Linguists, Warangal

7.Grierson (Sten Konow), 1906, Linguistic Survey of India, Calcutta

8.MaxMuller, 1965, Lectures on The Science of the Language, Munshi Ram Manoharlal , New Delhi (first published 1861)

9.McAlpin, David W., 1981, Proto – Elamo – Dravidian: The Evidence and its Implications, The American Philosophical Society, Philadelphia

10.Nagamma Reddy, K., 2004, Dravidian Phonology ,Contribution of Prof. M.B.Emeneau, 32nd All India Conference of Dravidian Linguists, Warangal

11.Ramakrishna Reddy, B.,2009, Language Endangerment and Fieldwork on Tribal Languages and Literature, IJDL, Thiruvananthapuram

12.Shanmugam,S.V., 1980, Foreword, The Language of Kattunaicka, A Linguistic Study by S. Natanasabapathy, Annamalai University

13.Subrahmanyam, P.S., 1983, Dravidian Comparative Phonology, Annamalai University, Annamalai Nagar

14.Upadhyaya, U.P., 1985, Karaajina Tulu Lexicon Specimen Volume-2, M.G.M.College ,Udupi

15.Zvelebi, Kamil V.,1984, Dravidian Linguistic Today, Journal of Asian Studies, Vol. 2 No.1 September 1984

# நாற்றிசைப் பெயராக்கம் நுட்ப விளக்கம்... தொடர்ச்சி

இரா. திருமாவளவன்
தேசியத் தலைவர்,
மலேசியத் தமிழ்நெறிக் கழகம்

நாற்றிசைப் பெயர்களுள் தென் திசைக்குத் தென் எனும் பெயர் தென்னையால் விளைந்தது என்பதை முன்னரே கண்டோம்.

வளைவு பொருள் அடிப்படையில்தான் தென்னையும் அமைந்தது. உல்> துல் > தெல் > தென்> தென்னு = வளை , தென்னுதல் = வளைதல் , கோணுதல்

தென்னு > தென்னை = வளைந்து நெளிந்த தென்னை மரம் .

பாவாணர் தம் வேர்ச்சொல் கட்டுரையில் வழங்கியுள்ள விரிவான விளக்கத்தை இங்கு ஒப்பிட்டு நோக்கல் நலம். " தில் > தெல் > தென் – தென்னுதல் = கோணுதல், சாய்தல், நெம்புதல். பல் தென்னிக் கொண்டிருக்கிறது என்பது உலக வழக்கு. தென் > தென்னை = பெரும்பாலும் கோணி வளரும் மரம்.

"பல்வகை யுதவி வழிபடு பண்பின்

அல்லோர்க் களிக்கும் அதுமுடத் தெங்கே" (நன்: 35)

தென் – தென்கு – தெங்கு =
1. தென்னை. "தெங்கி னிளநீ ருதிர்க்கும் வளமிகு நன்னாடு" (புறம். 29).

2. தெங்கந்தீவு.

3. போர்ச்சேவலின் திறங்குறிக்கும் குழூஉக் குறிகளுள் ஒன்று. "தெங்குக்குத் தெங்குவெல்லும் எனக் கோழிகளின் திறமறிந்து விடுதல்" (பு. வெ. 12, வென்றிப். 6, உரை). க. தெங்கு, ம. தெங்ங.

தெங்கு – தெங்கம். "தெங்கங்களு நெடும்பெண்ணையும் பழம்வீழ் மணற்படப்பை" (தேவா. 846:3).

தெங்கங்காய் = தேங்காய். "தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட பைங்கூந்தல்" (யாப். வி. 95, ப.372).

தெ. தெங்(க்)காய,ம.தேங்கா.

(மலேசியாவில் தேங்காய் எனும் வழக்கே பேச்சு வழக்கிலும் பரந்துள்ளது. இது யகரம் மறைந்து தேங்கா என்றும் வழங்கும். )

தென் = தென்னைமரம் இயற்கையாக வளர்ந்த தென்றிசை.

குமரிக்கண்டத்தில் ஏழ்தெங்க நாடிருந்தமையையும், தென்கண்டத்திலும் அதனையடுத்த தீவுகளிலும் இன்றும் தென்னை செழித்து வளர்தலையும் நோக்குக.

தென்– தெற்கு = தென்றிசை.

தென்மொழி = குமரிக்கண்டத்தின் தெற்கில் தோன்றிய தமிழ்மொழி .

தென்புலம் – தமிழகத்தின் தெற்கிலிருந்த பாண்டிநாடு.

தென்னவன் = தென்புலத்தை யாண்ட பாண்டியன். "

என்பது தேவநேயரின் தெளிந்த விளக்கம்.

தென்திசையில் குமரிப்பெருநில 49 நாட்டுப் பிரிவுகளுள், ஏழ்தெங்க நாடும் ஒன்று.

* ஏழ் தெங்க நாடு – 7 நாடுகள்

* ஏழ் மதுரை நாடு – 7 நாடுகள்

* ஏழ் முன்பாலை நாடு – 7 நாடுகள்

* ஏழ் பின்பாலை நாடு – 7 நாடுகள்

* ஏழ் குன்ற நாடு – 7 நாடுகள்

* ஏழ் குணகரை நாடு – 7 நாடுகள்

* ஏழ் குறும்பனை நாடு – 7 நாடுகள்

தென்னையைச் சிறப்பாய்க் கொண்ட

ஏழு நாடுகளின் தொகுதியே ஏழ்தெங்க நாடு என அழைக்கப்பெற்றது என்பார்கள்.

தமிழர் தென்திசை மக்கள் என்பதால் தென்னவர் எனச் சிறப்பாயும் அழைக்கப்பெற்றனர்.

"பொதியில் ஆயினும், இமயம் ஆயினும்

பதி எழு அறியாப் பழங் குடி கெழீஇய"

எனும் சிலப்பதிகார நூற்பா சொல்லும் கருத்திற்கொப்ப தமிழர், தென்திசை தமிழ்நாட்டகத்தே தோன்றியவர் என்பதைத் தெளிவாய்ச் சுட்டும் அருந்தமிழ்ச் சொல்லே தென்னவர், தென்னாடு, தென்னாட்டார், தென்பாண்டி, தென்மொழி முதலான சொற்களாகும். இவை பழந்தமிழ்ப் பயன்பாடே.

தமிழர் கடவுட் கொள்கையில் சிவனைத் தென்முக நம்பி என்றும் தென்னாடுடையவன் என்றும் கூறுவதைக் காண்க.

"தென்னாடுடைய சிவனே போற்றி,
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"
( திருவாசகம்)

தென்– தென்னு– தெற்கு எனவும் விரிந்து தென் திசையே குறித்தது.

நம் இலக்கியங்கள் பலவற்றுள்ளும் வளைந்த தென்னையால் தென்திசையைக் குறித்து மேலும் ஆகுபெயர்களாய் வேறு வேறு பொருள்களையும் தென் சுட்டுவதைக் காணலாம்.

தென் (பெ) 1. தெற்கு என்பதன் மருவு: "தென் புலம் படரும் தண் பனி நாளே" (குறு:317:7).

2.தெற்கு: "தென் இசை வனப்பும் தெற்கும் ஓர் பாடலும்" (நிக.பி:10:645).

3. ஓர் பாடல்: "தென் இசை வனப்பும் தெற்கும் ஓர் பாடலும்" (நிக.பி:10:645).

4. தெங்கு: "தாழை தென் நாளிகேரம் இலாங்கலிதாம் தெங்கின் பேர்" (நிக.சூ:9:12).

5. தாழை: "தென் இசை வனப்புத் தாழை தெற்கொடு கற்பும் ஆமே" (நிக.சூ:11:299).

தென் உரை (பெ) தமிழ்: "அன்ன நடையார் .... மடல் ஊரார் என்பது ஓர் வாசகமும் தென் உரையில் கேட்டு அறிவது உண்டு" (மங்:பெ.ம:76–8).

தென் உலகம் (பெ) இயம லோகம்: "தென் உலகம் ஏற்றுவித்த சேவகனை" (மங்:பெ.ம:197).

தென் கால் (பெ) தென்றல் காற்று: "தென் கால் விடுக்கும் செம்பின் பொருப்பினும்" (கல்:54:11).

தென்கையான் (பெ) தென்னிலங்கை மன்னன்: "தென்கையான் தேர் கடாவிச் சென்றெடுத்தான் " (நாவு : 4:34:10).

தென் சொல் (பெ) தமிழ்: "தென் சொல் விஞ்சு அமர் வட சொல்" (சம்:2:92:7).

தென் தமிழ் (பெ) தமிழ் மொழி: "என்றும் உள தென் தமிழ் இயம்பி இசை கொண்டான்" (ஆர:3:47).

தென் திசைக் கிழவன் (பெ) 1. அகத்திய முனிவர்: "தென் திசைக் கிழவனோ" (சுந்:12:66). 2. இயமன்: "தென் திசைக் கிழவன் தூதர்" (யுத்:16:43).

தென் திசைக் கோன் (பெ) இயமன்: "தென் திசைக் கோன்" (நாவு:6:98:10).

தென்திசை முதல்வன் (பெ) நமன் (யமன்): "அந்தகன் தருமன் தென் திசை முதல்வன் சண்டன் மறலி ....கடவுள் இயமன் என்று இவை (நிக: தி:1:13).

தென் திசையான் (பெ) தெற்குத் திக்குப் பாலகனாகிய இயமன்: "தென் திசையான் வன் தூதரும் ஏகினர்" (யுத்:21:1).

தென் நிலம் (பெ) இயம லோகம்: "தென் நிலத்து எதிர்ந்துளாரைத் தென் நிலம் தன்னில் ஏற்றி" (வி.பா: 41:146).

தென் பரதவர் (பெ) தென் திசைக்கண் குறு நில மன்னர்: "தென் பரதவர் மிடல் சாய" (புற:378:1).

தென் பாண்டி (பெ) பாண்டி நாடு: "தென் பாண்டி நாடே தெளி" (வாச:357).

தென் புலக் கோமகன் (பெ) இயமன்: "தென் புலக் கோமகன் தூதின் செல்கெனோ" (அயோ:5:22).

தென் புலக் கோன் (பெ) இயமன்: "சித்திரகுத்தன் எழுத்தால் தென் புலக் கோன் பொறி ஒற்றி வைத்த இலச்சினை" (பெரி:5:2:2).

தென் புலத்தவர் (பெ) தெற்குத் திசையிலுள்ள முன்னோர்: "இறந்த மைந்தனுக்கு உரிய தென் புலத்தவர் யாவரும் களி கூர" (வி.பா:41:146).

தென் புலத்தார் (பெ) முன்னோர் : "தென் புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல்" (குறள்:5:3:).

( இதற்குத் தெளிந்த அறிவு எனும் மற்றொரு பொருளும் உண்டு. தென்புலத்தார் = தெள்ளி அறிவினர்)

தென் புலம் (பெ) 1. தெற்குத் திசை: "வட புல வாடைக்கு அழி மழை தென் புலம் படரும் தண் பனி நாளே" (குறு:317:6–7).

2. முன்னோர் உலகம்: "தென் புல வாழ்நர்க்கு" (புற:9:3).

3. பாண்டி நாடு: "தென் புலம் காவலின் ஒரீஇ" (புற:71:18).

4. தென் தேயம்: "தென் புல மருங்கில் சாந்தொடு துறப்ப" (நெடு: 52).

5. இயம புரம்: "சித்திரகுத்தன் எழுத்தால் தென் புலக் கோன் பொறி ஒற்றி" (பெரி:5:2:2).

தென் புலர் (பெ) இயம படர்: "தென் புலர்க்கு என்னைச் சேர் கொடான்" (மங்:7:3:3).

தென் புலவர் (பெ) தமிழ்ப் புலவர்: "கலை மலிந்த தென் புலவர்" (வன்:7:30:11).

தென் புவி (பெ) தென்னாடு: "தென் புவி மீது தோன்றி அம் மெல்லியலாருடன்" (பெரிய:37).

தென் பூமி (பெ) தென்னாடு: "ஓதரும் தென் பூமி தமிழ்ப் பூமி என்பார்" (தி.தி:18:5).

தென் மலை (பெ) தென் திசைக்கண்ணதாகிய பொதியின் மலை: "தென் மலைப் பிறந்த சந்தனம் மறுக" (சில: 4:38).

தென் மேற்கு (பெ) தெற்கைச் சார்ந்த மேற்குத் திசை: "சேதியம் தொழுது தென் மேற்கு ஆக" (மணி: 28:175).

தென் மொழி (பெ) தமிழ்: "தொகுத்த வட மொழி தென் மொழி யாது ஒன்று தோன்றிடாதே" (நம்: 3:71).

தென் வரை (பெ) பொதிய மலை: "தென் வரைச் சாந்து மூழ்கி" (சீவ:9:87).

தென் வளி (பெ) தென்றல் காற்று: "தென் வளி தரூஉம் நேர் வாய்க் கட்டளை" (நெடு:61).

( தென் திசையினின்று வீசும் காற்று = தென் வளி )

தென்றல் (பெ) 1. தெற்கிலிருந்து வரும் காற்று: 'மராஅம் அலைத்த மண வாய்த் தென்றல்" (அக:21:12).

2. காமன் வாகனம் (தேர்): "வாகனம் தென்றல் மகரம் கொடியே" (நிக.பி:2:54).

தென்றல் காற்று (பெ) தெற்கிலிருந்து வருவதாகிய காற்று: "பொதியில் தென்றல் காற்றினால் அரும்பு நறுஞ் சூதம் போல்" (வி.பா:10:10).

தென்றல் தேரினன் (பெ) காமன்: "தென்றல் தேரினன் அங்கசன் மனோபுவே நீர் ஆழி வெம் முரசோன் காமன்' (நிக.சூ:1:34).

( தென்திசையினின்று வீசும் காற்றாகிய தென்றல் போலும் மயக்கினன் = காமன் )

தென்றல் தேரோன் (பெ) காமன்: "தென்றல் தேரோன் .. கருப்பு வில்லி காமன் பெயரே" (நிக: பி: 2:53).

தென்றல் வரு மலை (பெ) பொதிய மலை: "மலையம் தென் மலையே தென்றல் வரு மலை மலையின் நாமம்" (நிக. சூ:5:13). பொதிய மாமலையின் பெயர்

தென்றல் வளி (பெ) தென்திசைக் காற்று , தென்றல் காற்று: "தென்றல் வளி எறியின் மெய்யிற்கு இனிதாம்' (ஐ.ஐ:30)

தென்றலார் (பெ) தென்றல் காற்று: "தென்றலார் அடி வருடச் செழுங் கரும்பு கண் வளரும் திருவையாறே"" (சம் : 1:130:7).

தென்றற் கால் (பெ) தென்றல் காற்று: "இதம் பெறு தென்றற் காலும்" (வி.பா:2:90).

தென்றில் (பெ) தென் திசை: "தென்றில் அரக்கனைக் குன்றிற் சண்பை மன்" (சம்:1:90:9).

தென்றை (பெ) தென்றல்: "தென்றையது உளையத் திசைதான் உறப் போய்" (நீல:6:61).

தென்னம் (பெ) 1. தெற்கு: "தென்னம் பொருப்பன் நல் நாட்டுள்ளும்" (புற:33:7). 2. தென்னை: "தென்னம் வெள்ளி பாணித் தண் பளிங்கு நாகம்" (ஆர:10:96).

தென்னம் பொருப்பன் (பெ) தென் திசைக் கண் பொதிய மலையை உடைய பாண்டியன்: "தென்னம் பொருப்பன் நல் நாட்டுள்ளும்" (புற:33:7).

தென்ன மன்னன் (பெ) தென்னாட்டு மன்னனாகிய பாண்டியன்: "தென்ன மன்னனும் கண்டு அவன் செய்தி போல (தி: தி: 44:17)

தென்னர் (பெ) 1. பாண்டியர்: "பொன் அனி நெடுந் தேர்த் தென்னர் கோமான்" (அக:209:3).

2. தென்னாட்டவர்: "தென்னர் பிரான் கழறிற்று அறிவான் எனும் சேரலனே" (நம்:3:44).

3. தெற்கு: "அதற்குத் தென்னர் மாடு உறும் மறைகள் காணா மன்னும் அம்பலம் ஒன்று உண்டு" (கோ.பு:3:71).

தென்னவன் (பெ) 1. பாண்டியன்: "திரு வீழ் மார்பின் தென்னவன் மறவன்" (அக:13:6).

2. தென்னிலங்கை மன்னவனாகிய இராவணன்: "தென்னவன் மலை எடுக்க" (நாவு:4:43:10).

3. தென்னாடுடைய சிவ பெருமான்: "சேய நெடும் கொடைத் தென்னவன் சேவடி சேர்மின்களே" (:530)

தென்னவன் மாலை (பெ) வேப்ப மாலை: தென்னவன் தனக்குத்தானே சேற் கொடி வேப்பந் தார் ஆம்*' (நிக.சூ:12:148).

தென்னவனார் (பெ) நின்ற சீர் நெடுமாறர்: "திரு நீற்றின் சார்வுடைய கூன் நிமிர்ந்த தென்னவனார்" (ப: 1675).

தென்னன் (பெ) 1. அழகன்: "வினை தீர்த்து எனை ஆட்கொண்ட தென்னனை" (நாவு:5:4:5).

2. தென்னாடுடைய சிவன்: "தென்னன் திரு நந்தி சேவகன்" (மூல:1079). 3. இனியன்: "செப்பு ஆர் முலை பங்கன் தென்னன் பெருந் துறையான்" (வாச:185).

தென்னன் கொடி (பெ) கயல் கொடி: "சேரற்கு வில் கொடி தென்னற்குக் கயல் கொடி" (நிக. தி:12:202).

தென்னனார் (பெ) பாண்டிய மன்னராகிய நெடுமாறர்: "பூசல் அயில் தென்னனார்க்கு அனல் ஆகப் பொறாமையினால்" (நம்:3:79).

தென்னாத் தெனாத் தெத்தனா (இ) வண்ண வகை: "தென்னாத் தெனாத் தெத்தெனா என்று பாடி" (ப:7:2:6).

தென்னான் (பெ) தென்னவனாகிய சிவன்: "பொடி ஆடு திரு மேனி நெடுமாறன் முடிமேல் தென்னானை" (வன்: 7:38:8).

தெனாஅது (11வி) தெற்கில் உள்ளது: "தெனாஅது ஆய் நல் நாட்டு அணங்குடைச் சிலம்பில்" (அகம் :198:13–4).

தெனாது ( பெ) : தெற்கு ; வடாதும் தெனாதும் பரராசர் வகுத்த நேமி" (வி:பா:41: 80)

என , தென் அடியாய்ப் பிறந்த சொற்களின் ஆளுமையை இலக்கியங்களில் காணலாம்.

வடவர், தெற்கினைத் தட்சிணம் என்றும் யாமி என்றும் கூறுவர்; ஆங்கிலத்தில் சவுத் (south) எனக் கூறப்படுவதை அனைவரும் அறிவோம். தமிழுக்கும் இவற்றுக்கும் உள்ள தொடர்பு குறித்து விரிவாய்த் தொடர்ந்து காணலாம்.

# பண்டமாற்று !

முனைவர் ஆ. அரிமாப்பாமகன்
மேனாள் ஆங்கில விரிவுரையாளர்
புதுச்சேரி

"மதன மோக ரூப சுந்தரி
மதன மோக ரூப சுந்தரி
மதனாங்கி
வதனமே செம்பவளமே
என் இதய கீதமே
மனம் நிறை
மதன மோக ரூப சுந்தரி

மதன மோக ரூப சுந்தரா
மதனாங்கா..."
(இன்று போய் நாளை வா, வைரமுத்து)

"சிந்து நதியின் மிசை நிலவினிலே....
கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம்
காவிரி வெற்றிலைக்கு மாறுகொள்வோம்"
(பாரதியார்)

காவிரி வெற்றிலையைக் கொடுத்துக் கங்கைச் சமவெளிக் கோதுமையை வாங்கிக் கொள்ளும் முறை 'மாறுதல்' என்றும் 'மாறுகொள்ளுதல்' என்றும் அழைக்கப்பட்ட பண்டமாற்று முறையாகும்.

இப் பண்டமாற்று முறை ஆங்கிலத்தில் 'barter' system எனப்படும். இதிலும் ஏமாற்றித் தொழில் செய்பவர் உளர். அவர்களையும் barter என்ற சொல் குறிக்கும். சிலப்பதிகாரத்தில் பரத்தர் என்று குறிக்கப்பட்டுள்ளது.

"வறுமொழி யாளரொடு வம்பப் பரத்தரொடு
குறுமொழி கோட்டி நெடுநகை புக்குப்
பொச்சாப் புண்டு பொருளுரை யாளர்
நச்சுக்கொன் றேற்கும் நன்னெறி யுண்டோ"
(சிலப்பதிகாரம்)

* பரத்தர் > barter

மாறிவருதல் – விற்றுவருதல்.
கண்ணகியின் சிலம்பினை விற்பதற்காகக் கோவலன் பெற்றுச் செல்லும்போது,

" பொன்னே கொடியே புனைபூங் கோதாய்
நாணின் பாவாய் நீணில விளக்கே
கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வி
சீறடிச் சிலம்பி னொன்றுகொண் டியான்போய்
மாறி வருவன் மயங்கா தொழிகெனக்"

கூறுகிறான்.
மாறிவருவன் = விற்றுவருவேன்.
(உயிரோடு செல்லும் நான் கொலையுண்டு உரு மாறிவருவன் என்பதும் குறிப்புப் பொருளாக உள்ளது.)

பண்டைத் தமிழர்களிடையே நெல்லுக்கு இணையாக உப்புத் தரப்பட்டுள்ளது.

" கதழ்கோல் உமணர் காதல் மடமகள்
சில்கோல் எல்வளை தெளிர்ப்ப வீசி
நெல்லின் நேரே வெண்கல் உப்பு எனச்
சேரி விலைமாறு கூறலின்"
(அகநானூறு)

நெய்தல் நிலமக்கள் மீனையும், கள்ளையும் கொடுத்து அதற்கு விலையாகக் குறிஞ்சி நிலத்தாரிடம் தேன், கிழங்கு வாங்கிவந்த செய்தியைத்

"தேன் நெய்யொடு கிழங்கு மாறியோர்
மீன் நெய்யொடு நறவு மறுகவும்"

எனப் பொருநராற்றுப்படை கூறும்.

" நெல்லும் உப்பும் நேரே, ஊரீர்!
கொள்ளீ ரோ எனச் சேரிதொறும் நுவலும்"
(அகநானூறு)

"தம் நாட்டு விளைந்த வெண்ணெல் தந்து,
பிற நாட்டு உப்பின் கொள்ளை சாற்றி,
நெடு நெறி ஒழுகை நிலவு மணல் நீந்தி"
(நற்றிணை)

"சுள்ளி அம் பேரியாற்று வெண்ணுரை கலங்க
யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்"
(அகநானூறு)

கறி – மிளகு, பேரியாறு இப்போது முல்லைப் பெரியாறு.

நெல்லுக்கு இணையாக உப்புத் தருவதற்கு உமணர்கள் உப்புக்காய்ச்ச உப்பு அளங்கள் இருந்துள்ளன. இன்றும் பேரளம், கோவளம் என்ற ஊர்கள் உள்ளன.

செய்யும் வேலைக்கு ஈடாகக் கூலங்கள் கொடுத்தால் கூலி.
(சம்பா)நெல்லும், (அளம்) உப்பும் கொடுத்தால் சம்பளம்.
** சம்பளம் > salary > salt.

இப்படி ஒரு பொருளுக்கு வேறுபொருளை மாறுகொண்டு வணிகம் செய்வார் மாறுகொண்டோர் என அழைக்கப்பட்டிருக்கலாம்.
* மாறுகொண்டோர் > merchant

** மாறுகோடல் (கொள்ளுதல் – கோடல், செல்லுதல் – சேறல்) செய்யும் இடம் > market, marketing.

பண்டமாற்று முறை மெசபடோமியாவில் (கிமு 6000) தொடங்கிப் பரவியது எனப்படுகிறது. பின்னாளில் சோழிகள் நாணயங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.
இந்தியாவில் மோரியர் ஆட்சியில் இருந்த பொன், வெள்ளி, செம்பு நாணயங்கள் (சுவர்ணரூபா, ருப்யாரூபா, தாமிரரூபா) குறித்துச் சாணக்கியர் தம் பொருணூலில் (அருத்த சாத்திரம்) குறிப்பிட்டுள்ளார். பெரும்பான்மை வெள்ளி பயன்படுத்தப் பட்டுள்ளது. சிங்கப்பூரில் தமிழர்கள் பணத்தை வெள்ளி என்பர். பிரான்சிலும் வெள்ளி – argent (Ag) என்பர். இந்தியில் ருப்யா என்றால் வெள்ளி. ஆகையால் ரூபா என்றால் வெள்ளி என்றே இதுகாறும் நினைத்திருந்தேன்.

"சங்கக் காலம் தொடங்கிக் கிடைத்துள்ள நாணயங்களில் சில பழம் பாண்டிய மன்னர்களுடையவை. அவை சதுர வடிவிலும், நீள் சதுர வடிவிலும் அமைந்துள்ளன. அவற்றின் ஒரு புறம் மீன் சின்னத்தையும், மறுபுறம் யானை அல்லது எருதின் சின்னத்தையும் பொறித்துள்ளனர். அவை கி. மு. ஐந்தாம் நூற்றாண்டு முதல் கி. பி. இரண்டாம் நூற்றாண்டு வரையிலான கால அளவுடையவை. மதுரைப் பழங்காநத்தம் பகுதியில் கோவலன் பொட்டல் எனுமிடத்தில் சங்கக் காலத்து நாணயங்கள் கிடைத்துள்ளன."

இப்படி மீன், எருது, யானை,.. போன்ற 'உருவங்கள்' பறிக்கப்பட்ட காசுகள் நாணயங்களாக இருந்துள்ளன.
இவை 'உருவம்' என்றே அழைக்கப்பட்டுள்ளன.
உருவம் > ரூபம் > ரூபா > ரூபாய்.

(உருவம் அற்றவை – உருவம் அல்லாதவை அல் + உருவம் = அருவம் > அரூபம் – அசரீரி).

ருப்யா வேறு, ரூபா வேறு.
ருப்யா என்னும் வெள்ளியைக் குறிக்கும் இந்திச்சொல் ரூபா என்னும் சொல்லோடு மயங்கி, நம்மை உருவம் என்ற தமிழ் வேர்ச்சொல்லை மறக்கடித்துவிட்டது.

காந்தி.... உருவம் பொறித்த பணத்தை இனி உருவா என்றே அழைக்கலாம்.

*** உருவம் > ரூபம் > ரூபா.

* barter (v.)
"to traffic or trade by exchanging one commodity for another," mid-15c., apparently from Old French barater "to barter, cheat, deceive, haggle" (also, "to have sexual intercourse"), 12c., which is of uncertain origin, perhaps from a Celtic language (compare Irish brath "treachery"). Connection between "trading" and "cheating" exists in several languages. Related: Bartered; bartering.

** salary (n.)
late 13c., "compensation, payment," whether periodical, for regular service or for a specific service; from Anglo-French salarie, Old French salaire "wages, pay, reward," from Latin salarium "an allowance, a stipend, a pension," said to be originally "salt-money, soldier's allowance for the purchase of salt" [Lewis & Short] noun use of neuter of adjective salarius "of or pertaining to salt; yearly revenue from the sale of salt;" as a noun, "a dealer in salt fish," from sal (genitive salis) "salt" (from PIE root *sal- "salt").

* merchant (n.)
c. 1200, from Anglo-French marchaunt "merchant, shopkeeper" (Old French marcheant, Modern French marchand), from Vulgar Latin *mercatantem(nominative *mercatans) "a buyer," present participle of *mercatare, frequentative of Latin mercari "to trade, traffic, deal in" (see market). Meaning "fellow, chap" is from 1540s; with a specific qualifier, and suggesting someone who deals in it (such as speed merchant "one who enjoys fast driving"), from 1914.

** marketing (n.)
1560s, "buying and selling," verbal noun from market (v.). Meaning "produce bought at a market" is from 1701. The business sense, "process of moving goods from producer to consumer with emphasis on advertising and sales," is attested by 1897.

*** Arthashastra, written by Chanakya, prime minister to the first Maurya emperorChandragupta Maurya(c. 340–290 BCE), mentions silver coins as rūpyarūpa, other types of coins including gold coins (Suvarnarūpa), copper coins (Tamrarūpa) and lead coins (Sisarūpa) are also mentioned. Rupa means form or shape, example, Rūpyarūpa, Rūpya – wrought silver, rūpa – form.

****

# உயிரறிவியலின் முன்னோடி

இலக்குவனார் திருவள்ளுவன்
தலைவர் – தமிழ்க் காப்புக் கழகம்

1902ஆம் ஆண்டு உலக மக்களை வியப்பில் ஆழ்த்தினார் அறிஞர் சகதீசு சந்திரபோசு. அவர் வெளியிட்ட உயிரினங்கள் – உயிரற்றவற்றின் துலங்கல் தன்மை (Response in the Living and Non&Living) என்னும் நூலில் தாவரங்களுக்கு உயிர் உண்டு என்றதால் குழப்பமும் வியப்பும் ஏற்பட்டு இறுதியில் உலகம் அவரைப் போற்றியது. நம்மிடம் உள்ள அறிவியல் புதையலை அறியாத நாமும் அறியாமையால் இன்று வரையும் அவ்வாறுதான் படித்து வருகிறோம்.

பாடல் வடிவில் உள்ள தமிழ் இலக்கிய உண்மைகள் யாவும் கற்பனையே என்னும் மாயையில் உள்ளதால் 3000 ஆண்டுகளுக்கு முன்னரே அறிஞர் தொல்காப்பியர் தமக்கும் முன்னரே தாவரங்களுக்கு உயிர் வெளிப்படுத்திய அறிவியல் உண்மையை உரியவாறு உலக உண்டு என்பதை அறிவியல் அறிஞர்களின் பார்வைக்குக் கொண்டு செல்லத் தவறியுள்ளோம். தொல்காப்பியர்,

"ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே."

(தொல்காப்பியம்: மரபியல் 27)

என ஓரறிறவு முதல் ஆறறிவு வரை உள்ள உயிர்களை வகைப்படுத்தி நெறிப்படுத்தியுள்ளனர், அவருக்கும் முன்னோர் என்கிறார். அத்துடன் அவர் நிறுத்திக் கொள்ளவில்லை.

"புல்லும் மரமும் ஓரறி வினவே
பிறவும் உளவே அக்கிளை பிறப்பே"

(தொல்காப்பியம்: மரபியல் 28)

என வரிசையாக ஓரறிவு– ஆறறிவு உயிர்களை விளக்குகிறார்.

தமிழ்வழிக் கல்வியை நாம் இழந்ததால் நம் அறிவியல் வளத்தையும் இழந்தோம்! உலகினர்க்குத் தமிழ் அறிவியல் சிறப்பை எடுத்துரைக்கவும் தவறி விட்டோம்! அறிவியல் மேதைகளாகும் வாய்ப்புகளையும் தவற விட்டோம்!

நன்றி: அன்றே சொன்ன அறிவியல்

# எழில் நலம் – கருத்தாய்வு

பேரா. முனைவர் ப. கொழந்தசாமி,

அரசினர் ஆய்வு நிறுவனம், புதுச்சேரி.

மனித ஆற்றலும் ஆளுமையும் போற்றத்தக்கனவாக அமைகின்றன. இவை கல்வியறிவோடும் செயல்திறனோடும் இயையும்போது மேலும் சிறப்படைகின்றன. மானுட மேன்மைக்கான கொள்கை வரைவான திருக்குறளின் கல்லாமை அதிகாரத்தில் இக் கருத்து வலியுறுத்தப்படுகின்றது. சான்றாக,

"நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்

மண்மாண் புனைபாவை யற்று" (குறட்பா 407)

என்னும் குறட்பாவில் ஒன்றை நோக்கி ஆராயவல்ல கல்வியறிவும் அதனால் உண்டாகின்ற திறனும் இலாதவனின் சமூகப் பயனின்மை உணர்த்தப்படுகின்றது. அப்போது வலிமையான பருத்த உடல் தோற்றம் பொய்யானது; துணிக்கடைப் பொம்மை போன்று இயங்க இயலாதது என்னும் உவமையால் தெளிவிக்கப்படுகின்றது.

காண்பாரைக் கவர்கின்ற வளமையான உடல் தோற்றம் குறித்துத் தொல்காப்பியம்,

"கற்பும் ஏரும் எழிலும் என்றா" ( பொருளியல், நூற்பா 53 அடி 02)

என்று சுட்டுகின்றது. புறநானூறு 13 ஆம் பாடலின் 03ஆம் அடி,

"எய்கணை கிழித்த பகட்டுஎழில் மார்பு"

என்று அமைந்துள்ளது. இவ் அடியிலும் பரந்துயர்ந்த வீரனின் மார்பு என்னும் கருத்தில் இச் சொல் பயில்கின்றது. எனவே ஆளும் வளரணும்; சீரிய கல்வியால் அறிவும் வளரணும்.

இங்ஙனம் தமிழ்ப் இலக்கியப் பொருண்மை மரபில் பரந்து விரிந்த மார்பு / உடல் என்னும் கருத்திலும் எழில் ஆளப்படுகின்றது. ஆனால் மேம்போக்காகப் பார்க்கின் இது அழகை மட்டும் சுட்டுவதாகத் தோன்றும். பொருண்மை விழிப்புணர்வோடு அணுகின் தெளிவு வாய்ப்பாகி, இலக்கியக் கருத்தும் விழுமியமும் தெளிவாக வாய்க்கும்.

# அகரமுதலி இயக்கக நூல்கள் விற்பனை


தமிழ்நாடு அரசு

## செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி திருந்திய பதிப்பு !

**A Comprehensive Etymological Dictionary of the Thamizh Language Revised Edition**

## ஏழு மடலங்கள்

**தமிழ் அகரமுதலி வரலாறு,**
**தமிழ்ச் சொற்பிறப்பியல் நெறிமுறைகள் அடங்கியது**
**பக்கங்கள் 8060 விலை உருபா 8,027/-**

**கழிவு 35% போக விலை உருவா 5,216/- மட்டுமே**

குறிப்பு: தொகையைப் பணமாகவோ மின்னணு முறையிலோ (through ECS Payment) வழங்கலாம்.
"The Director, Directorate of Tamil Etymological Dictionary Project, Chennai - 600 028"

IFSC Code: IDIB000K204 Account No: 759144235 (Indian Bank)

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்
நகர் நிருவாக அலுவலக வளாகம் முதல்தளம், எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை, மே.இரா.செ.நகர்,
சென்னை – 600028. தொலைபேசி: 044–29520509
மின்னஞ்சல் முகவரி: dir.dtedp@tn.gov.in வலைத்தளம்: www.sorkuvai.tn.gov.in

# அகரமுதலித் திட்ட இயக்ககத் தமிழ்க் கலைக்கழகத்தின் 201, 202–ஆம் கூட்டங்கள்

தமிழ்நாடு அரசு, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத் தமிழ்க் கலைக்கழகத்தின் 201, 202ஆம் கூட்டங்கள் முறையே 2026 மார்ச்சுத் திங்கள் 03, 05 ஆகிய நாள்களில் நடைபெற்றன.

அகரமுதலி இயக்ககத்தில் நடைபெற்ற கூட்டங்களில், அலுவல்சாரா உறுப்பினர்களான புலவர் வெற்றியழகன், முனைவர் கு.பாலசுப்பிரமணியன், முனைவர் இரா.கு. ஆல்துரை, திரு. அ. மதிவாணன், அறிவியல் ஒளி ஆசிரியர் திரு. நா. சு. சிதம்பரம் ஆகியோர் பங்கேற்றனர். மேலும், மேனாள் ஆங்கில விரிவுரையாளர் முனைவர் ஆ.அரிமாப்பாமகன், தமிழார்வலர்கள் திரு.கோ.பிச்சை வள்ளிநாயகம், திரு. மு. இராசேந்திரன் மற்றும் அலுவல்சார் உறுப்பினர்கள் பங்கேற்றனர். இவ்விரு கூட்டங்களிலும் சேர்த்து மொத்தம் 267 தமிழ்க் கலைச் சொற்களுக்கு வல்லுநர் குழு ஏற்பளித்துள்ளது.

### ஏற்பளிக்கப்பட்டுள்ள சொற்களுள் சில:

| | |
|---|---|
| Additive manufacturing | முத்திரட்சி அச்சுமுறை |
| Aeroacoustics | காற்றொலியியல் |
| Aerocapture | காற்றிழுவை |
| Damper winding | தண்ம உழற்சி |
| Antenna beam | உணர்கொம்புக் கற்றை |
| Beam powered propulsion | ஒளிக்கற்றை உந்துவிசை |
| Emission inventory | மாசுமிழ்வுப் பட்டியல் |
| Extraction tool | பிரிபொறி |
| Grader truck | சமனியுந்து |
| Load balancer | சுமை சமனாக்கி |
| Mass firing | மிகப்பலர் பணிநீக்கம் |
| Mass layoff | நிறுவனப் பணிமுடக்கம் |
| Mass termination | மிகப்பலர் பணிவிலக்கம் |
| Non biodegradable waste | மட்காக் கழிவு |
| Zero point calibration | சுழிநிலை அளவீடு |
| Anti drag feature | இழுவெதிர் விசை |
| Abridger | சுருக்குநர் |
| Air warrior | வான் வீரர் |
| Amphibious aircraft | நீர்நில வானூர்தி |
| Approach lighting system | சைகை விளக்கமைப்பு |
| Automatic sliding door | தானியங்கி நழுவு கதவு |
| Biggest hike | உச்ச உயர்வு |
| Biopharma manufacturing | உயிரிய மருந்தாக்கம் |
| Bullion dream | பொற்கனா |
| Caster Wheel | சுழல் சக்கரம் |
| Chilling post | திகில் செய்தி |
| Course deviation indicator | பாதை விலகல் காட்டி |
| Deepfake detector | போலிகாணி |
| Diffusion model | விரவல் போன்மம் |
| Digital mammography | மார்பக எண்ம ஆய்வி |
| Distasteful call | விரும்பா அழைப்பு |
| Evolutionary optimization | கூர்தலற உத்தி |
| Exotic creature | அயலக உயிரினம் |
| Extremist figure | தீவிரைவாளி |
| Finger buffet | விரலுணவு |

# நாளும் விளையும் சொற்கதிர்